## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடுஎண்.09/2023 நாள் : 15.02.2023

### தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2022)–ன்கீழ் சென்னை குடிநீர் வாரிய உரிமம் பெற்ற வாகனங்கள் மூலம் மட்டுமே சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் கழிவுநீர் வெளியேற்றப்பட வேண்டும்.

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்

திறந்தவெளி மற்றும் நீர்நிலைகளில் மலக்கசடு, கழிவுநீர் மற்றும் பிற கழிவுகளை வாகனங்கள் மூலமாக முறையற்ற முறையில் வெளியேற்றுவதை தடுக்கவும் மற்றும் முறையான சுத்திகரிப்பை உறுதிசெய்ய தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2022) 02.01.2023 அன்று முதல் செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. அதனடிப்படையில், சென்னை குடிநீர் வாரிய உரிமம் பெற்ற வாகனங்கள் மூலம் மட்டுமே சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் கழிவுநீர் வெளியேற்றப்பட வேண்டும்.

சென்னை குடிநீர் வாரியத்தின் கீழ்க்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் மட்டுமே உரிமம் பெற்ற கழிவுநீர் வாகனங்கள் மூலமாக கழிவுநீரை வெளியேற்ற வேண்டும்.

| வ.எண் | கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் உந்துநிலையங்கள் செயல்படும் இடங்கள் | மண்டலம் |
|---|---|---|
| 1 | கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | தண்டையார்பேட்டை |
| 2 | கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | கோடம்பாக்கம் |
| 3 | தாழங்குப்பம் கழிவுநீர் உந்துநிலையம் | திருவொற்றியூர் |
| 4 | ஜெய்ஹிந்த் நகர் கழிவுநீர் உந்துநிலையம் | திருவொற்றியூர் |
| 5 | கிளிஜோசியம் நகர் கழிவுநீர் உந்து நிலையம் | திருவொற்றியூர் |
| 6 | மணலி நியு டவுன் கழிவுநீர் உந்து நிலையம் | மணலி |
| 7 | மாத்தூர் எம்.எம்.டி.ஏ கழிவுநீர் உந்து நிலையம் | மணலி |
| 8 | தாங்கல்கரை கழிவுநீர் உந்துநிலையம் | மாதவரம் |

| | | |
|---|---|---|
| 9 | கடப்பா சாலை கழிவுநீர் உந்துநிலையம் | மாதவரம் |
| 10 | ராமச்சந்திரா நகர் கழிவுநீர் உந்துநிலையம் | மாதவரம் |
| 11 | தண்டையார்பேட்டை "F" நியு கழிவுநீர் உந்துநிலையம் | தண்டையார்பேட்டை |
| 12 | ஜவஹர் நகர் கழிவுநீர் உந்துநிலையம் | திரு.வி.க.நகர் |
| 13 | முகப்பேர் மேற்கு கழிவுநீர் உந்துநிலையம் | அம்பத்தூர் |
| 14 | கீழ்ப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையம் | அண்ணா நகர் |
| 15 | கிரீம்ஸ் சாலை கழிவுநீர் உந்து நிலையம் | தேனாம்பேட்டை |
| 16 | கங்கா நகர் கழிவுநீர் உந்துநிலையம் | வளசரவாக்கம் |
| 17 | இந்திரா நகர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | அடையாறு |
| 18 | எல்.ஐ.சி காலனி கழிவுநீர் உந்துநிலையம் | அடையாறு |
| 19 | ஏ.ஜி.எஸ்.காலனி கழிவுநீர் உந்துநிலையம் | பெருங்குடி |
| 20 | நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | கோடம்பாக்கம் |
| 21 | பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | பெருங்குடி |
| 22 | சோழிங்கநல்லூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | சோழிங்கநல்லூர் |

எனவே, கழிவுநீர் லாரி உரிமையாளர்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் கழிவுநீர் வெளியேற்றுவதற்கான உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்களை அனைத்து மண்டல அலுவலகங்களிலும் பெற்று நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், சென்னை குடிநீர் வாரியத்தின் அனுமதியின்றி கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டால் உரிய சட்ட விதிகளின்படி கழிவுநீர் லாரி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்